


திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை – பல்லாவரத்தில் நடைபெற்ற – கழக முன்னோடி என்.ஆனந்தன் மகன் ஏ. திருமலை (எ) திலீப் – எம். வித்யா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் திருமதி. துர்கா ஸ்டாலின், காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், முன்னாள் எம்.எல்.ஏ., இ.கருணாநிதி மற்றும் மணமக்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.6.2026) அரும்பாக்கத்தில் நடைபெற்ற சென்னை மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எம்.ஜீவானந்தம் – பிருந்தா இணையரின் மகன் ஜெ.ரூபேஷ் – வி.சரண்யா ஆகியோரின் மண விழா வரவேற்பில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள், தொழிலதிபர் நல்லிகுப்புசாமி, புகைப்பட நிபுணர் யோகா, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ந.இராமலிங்கம், ச.பரமசிவம் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

### பெரம்பூர் தொகுதியில்

# விஜய் வெற்றியை எதிர்த்து வழக்கு!

### கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர் தொடர்ந்தார்!



சென்னை, ஜூன் 22 -
பெரம்பூர் தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பெரம்பூர் தொகுதியில் த.வெ.க. தலைவர் விஜய், தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.சேகர் உள்ளிட்ட பல்வேறு கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இத்தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த தொகுதியில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக கூறி, முதல்வர் விஜயின் வெற்றியை எதிர்த்து கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர், வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

### ‘நான் முதல்வன்’ திட்டத்தை முடக்குவது

# தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயல்!

### த.வெ.க. அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூன் 22 –**
**நீங்கள் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் பெயரை மாற்றலாம். ஆனால் அத்திட்டத்தின் சாதனைகளையும் நன்றியுணர்வையும் மக்கள் மனங்களில் இருந்து நீக்க முடியாது. இத்திட்டத்தை முடக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயல் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

நீங்கள் ‘நான் முதல்வன்’ Social Media பக்கங்களின் பெயரை மாற்றலாம். அதில் இருந்த பதிவுகளை delete செய்யலாம்.






ஆனால், இதுபோல ஆயிரம் ஜெனிபர்களின் கனவை நனவாக்கிய ‘நான் முதல்வன்’ திட்டத்தின் சாதனைகளையும் நன்றியுணர்வையும் மக்கள் மனங்களில் இருந்து Delete செய்யவே முடியாது. அவை அவர்களின் இதயத்தில் ஆழமாக Archive செய்யப்பட்டுவிட்டன.

கடந்த 5 ஆண்டுகளாக, எனது ஆட்சிக்காலத்தில் “படிங்க, படிங்க, படிங்க” என்று தொடர்ந்து சொல்லி வந்தேன். அப்படி படித்து முன்னேற விரும்பும் இளைஞர்களுக்கு உதவத்தான் ‘நான் முதல்வன்’ எனும் என் கனவுத் திட்டத்தைத் தொடங்கினேன். அதனை முடக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயலாக அமைந்து விடும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருச்சி கிழக்கு தொகுதி

# அ.தி.மு.க.விலிருந்து விலகி 100க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில்!

திருச்சி, ஜூன் 22 -
திருச்சி கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட அ.தி.மு.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அக்கட்சியிலிருந்து விலகி, மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.



திருச்சி கிழக்கு தொகுதி, 17வது வட்ட அ.தி.மு.க வட்டச் செயலாளர் சிங்கமுத்து தலைமையில், நூற்றுக்கும் மேற்பட்ட அ.தி.மு.கவினர் அக்கட்சியிலிருந்து விலக முடிவு செய்தனர். அதன்படி, அவர்கள் அனைவரும் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தங்களை அதிகாரப்பூர்வமாக தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

மாற்றுக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தவர்களை, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பொன்னாடை அணிவித்து முறைப்படி வரவேற்றனர்.

இந்த விழாவின் போது பின்வரும் தி.மு.க முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்:

மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் பகுதிக் கழகச் செயலாளர்பாபு வட்டக் கழகச் செயலாளர்கள் மனோகர் சுப்பிரமணி மேலும் இந்நிகழ்வில் ஏராளமான தி.மு.க கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்டச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலக்குழு தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தாராபுரம் குகன் வரவேற்புரையில் துணை அமைப்பாளர்கள் ஜி.சிவராஜ், எஸ்.சோபனா பி.அருண்மொழி, எஸ்.மேகநாதன், எஸ்.சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கருத்தரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைக் கழக பேச்சாளர் திருப்பூர் மகிழவன், மாநில மகளிர் அணி துணைச்செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாநில மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

### மதுரை அவனியாபுரம் பட்டியலின

# அருந்ததியர் பட்டதாரி இளைஞர் படுகொலை! சாதிவெறி கூலிப்படையினரின் கொடூரச்செயல்!

### ஆதித்தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது!

சென்னை, ஜூன் 22 -
ஜல்லிக்கட்டுக்கு புகழ் பெற்றது அவனியாபுரம் மட்டுமல்ல, சாதி வெறிக்கும் புகழ் பெற்றது என நிரூபிக்கின்ற வகையில் ஒரு சாதி வெறிப் படுகொலை சம்பவத்தை கண்டுள்ளது அவனியாபுரம்.

இப்பகுதியில் வசிக்கும் தங்களை ஆதிக்க சாதியாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பெரும்பான்மை இளைஞர்கள் தங்கள் கைகளில் மஞ்சள் சிவப்பு கயிறு கட்டிக் கொண்டு அலைவதை சர்வ சாதாரணமாக காணலாம் அதே கலரில் ஒரு இன்று கட்சி ஆள்வதையும் அவர்கள் பெருமையாக கருதுவதையும் பார்க்க முடிகிறது.

படுகொலை செய்யப்பட்ட பாலாஜி (30) என்ற இளைஞர் அருந்ததியர் கிருஷ்ணன் குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரி கடந்த 24-5-2026 அன்று இரவு அவனியாபுரம் மதுரை மாநகராட்சி காலனி குடியிருப்பில் அமைந்துள்ள ஸ்ரீ வீர மாகாளியம்மன் (HRNC சார்பற்ற) திருக்கோவில். இக்கோவில் என்னவோ பொதுக் கோவில் என கூறிக்கொண்டாலும் ஒரு குறிப்பிட்ட சாதியின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்ட கோவில் என்பதாலே என்னவோ எக்குலம் வாழனும் முக்குலம் ஆளனும் போன்ற பேனர்கள் ஆங்காங்கே காணமுடிகிறது.

கோவில் முன்பாக திருவிழாவின் போது பெண்கள் கும்மியடித்துக் கொண்டிருந்த சமயத்தில் முக்குலம் பெருமை கொண்ட சமூகத்தைச் சேர்ந்த சிலர் கஞ்சா போதை அடித்துக் கொண்டு ரகளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் சத்தம் போட்டு சமரசம் செய்ய முற்பட்டிருக்கிறார் பாலாஜி.

சக்கிலியப் பயலெல்லாம் சமரசம் செய்யக் கூடிய அளவிற்கு பெரியாளா?

என மனதில் வைத்துக் கொண்டு நேற்று முன்தினம் (19-6-2026) மதியம் சுமார் 2.30 மணி அளவில் சுமார் ஆறு பேர் கொண்ட சாதிவெறி கூலிப்படை கும்பலால் சுற்றி வளைக்கப்பட்டு பாலாஜியை சரமாரி வெட்டி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இவருடன் ராசா உசேன் என்பவரையும் அக்கும்பல் வெட்டியுள்ளது.

**ஆளும் அரசு காரணமாக அமைந்துவிடக்கூடாது!**

இன்றைக்கு சாதி என்பது கோவில்களாலும் குலங்களாலும் சடங்குகளாலும் கூர்தீட்டப்படுவதற்கு ஆளும் அரசு காரணமாக அமைந்து விடக் கூடாது.

ஏனென்றால் மாநிலத்தில் தலைமையில் இருக்கக் கூடிய முதலமைச்சரே அரை நிர்வாணத்துடன் கோவிலுக்கு செல்வதை காண முடிகிறது.

தங்களை தூய்மை சக்தியாக கருதும் த.வெ.க. அரசு பட்டியலின அருந்ததியர் படுகொலைக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட பொறுப்பு அமைச்சருமான சி.டி.நிர்மல் குமார் உடனடியாக பாதிக்கப்பட்ட பாலாஜி குடும்பத்தை சந்தித்து உரிய பாதுகாப்பையும் நீதியையும் பெற்றுத் தர முன்வர வேண்டும்.

ஏனென்றால் கடந்த ஆட்சியில் நடந்த சாதிய படுகொலைகளுக்கு நியாயவான்கள் போல் பேசிய தவெக வினர் தங்கள் ஆட்சியில் நடந்த இந்த சாதிய படுகொலைக்கு தவெக வினர் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதை உங்களின் பொது மனசாட்சிக்கு விட்டுவிடுகிறேன்.

இவ்வாறு ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா. அதியமான் தெரிவித்துள்ளார்.



தேர்தல் வாக்குறுதிப்படி தவெக அரசு பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கோரி அந்தியூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு விவசாயிகள் பெருந்திரளாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.